Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# Animals in the Battle Field of Sangam Age

**Dr. A. Pushpa Santhi**, Assistant Professor of Tamil, St.Joseph College of Arts and Science, Vaikalipatti, Tenkasi.
**ORCiD: https://orcid.org/0000-0002-0857-8937**
**DOI: 10.5281/zenodo.7312785**

## Abstract

*The people in the Sangam age believed bravery was their inspiration. From this point of view, they were trained in the animals that are used in war and other combat. The animals were not only responsible for goods transport, but they had to carry people from one place to another as well. During the war animals like horses, elephants and others were taken to the battlefields. Kings also used armies including elephants and cavalry to fight and protect their country. Based on this, animals like elephants and horses living in the forest were tamed by the soldiers and trained for war. Even though there were various animals in the forest, only elephants and horses were considered animals suitable for war. This article tries to explain the news about animals through the octet. Thus the researcher analysed how the people in the Sangam age involved the wild animals in war throughout the anthology "Ettuth Thogai".*

**Keywords:** Sangam Age, War, Animals.

## References

[1] A.Aalis. *Pathitrupathu*. Chennai: New Century Book House (P) Ltd, 2007.
[2] P.Subramanian., *Paripaadal*. Chennai: New Century Book House (p) Ltd, 2007.
[3] M. Rajamanikkanar. *Tamil Aatchi*. Chennai: Paarinilayam, 1970.
[4] K. Govindan. *Pandaith Thamilar Porneri*. Chennai: Valluvar Pannai, 1980.
[5] S. Vidyanandan. *Tamil Mandram*, Kandi, 1954.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# சங்க கால போரில் விலங்கினங்கள்

**முனைவர் ஆ. புஷ்பா சாந்தி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெய்க்காலிப்பட்டி, தென்காசி மாவட்டம்.
ORCiD: https://orcid.org/0000-0002-0857-8937
DOI: 10.5281/zenodo.7312785

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலத்தில் வாழ்ந்த மனிதன் வீரத்தினை தமது மூச்சாக கொண்டு செயல்பட்டனர். அதன் அடிப்படையில் பகைவர்களோடு போர் புரியும் பொருட்டு விலங்கினங்களை தன்வயப்படுத்தி பழக்குவித்தனர். தொடக்க காலத்தில் ஆடு, மாடு, கோழி, பன்றி போன்ற விலங்கினங்கள் மனிதர்களின் உணவு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டன. அதன் அடிப்படையில் காட்டு விலங்கினங்களை பிடித்து பழக்குவித்து மனிதர்களின் தேவைகளான சுமை சுமக்கவும், போக்குவரத்திற்காகவும், உழவு பணிகளிலும் பயன்படுத்தினர். அந்த வளர்ச்சியின் அடுத்தக்கட்டமே போர்களில் யானைகள், குதிரைகளைų; பயன்படுத்தியது. சங்க கால மனிதர்கள் காடுகளில் இருந்து கொண்டுவரப்பெற்ற யானைகள், குதிரைகளை எவ்வாறு போரில் ஈடுபடுத்தினர் என்பதனை சங்க இலக்கியமான எட்டுத்தொகையின் வழி இக்கட்டுரை முயல்கின்றது.*

**திறவுச்சொற்கள்**: சங்க காலம், போர், விலங்கினங்கள்.

**முன்னுரை**

சங்க காலத்தில் வீரமே ஆடவர்க்குரிய தலைசிறந்த பண்பாகக் கருதப்பட்டது. அதனால் தமிழ்நிலம் வீரத்தின் விளைநிலமாகவும், தமிழ் மன்னர்கள் வீரவுணர்வு மிக்கவர்களாகவும் விளங்கினர். மரபுவழி வந்த அரசுரிமைப் பெறினும் போரை எதிர் கொள்ளும் வீரமுடைய மன்னனே ஆட்சி பொறுப்பில் சிறக்க முடியும் என அன்றைய மன்னர்கள் கருதினர். வடநாட்டு இராசபுத்திரர்கள் இடைக் காலத்தில் 400 ஆண்டுகள் தம்முன் ஒருவரை ஒருவர் வென்று, கொன்று, வாழ்வதே வீரம், மானம், கொற்றம் எனக் கருதினர். இவர்கள் செய்த போர்கள் இவர்களின் வாழ்விற்கே பயன் இல்லாது அவர்களின் அழிவிற்கே காரணமாயின. பண்டையத் தமிழர்களும் இவ்வாறே தம்முள் போரிட்டு அழிந்து ஒழிந்தனர். அவ்வாறு மன்னர்கள் போரிடுவதற்காகவும் தங்களின் நாட்டை காப்பாற்றுவதற்காகவும் போர்ப்படைகளில் யானைப்படை குதிரைப்படை உள்ளிட்ட படைகளையும் பயன்படுத்தினர். அதன் அடிப்படையில் காட்டில் வாழும் யானைகள், குதிரைகள் போன்ற விலங்கினங்கள் படை வீரர்களால் தன்வயப்படுத்துதலுக்கு உள்ளாக்கப்பட்டு போரின் பொருட்டு பழக்குவிக்கப்பட்டன. காடுகளில் பல்வேறு விலங்கினங்கள் இருந்த போதும் யானைகளும்

குதிரைகளும் மட்டுமே போருக்கு ஏற்ற விலங்கினங்களாக கருதப்பட்டது. அவ்வாறு தன்வயப்படுத்தப்பட்டு விலங்கினங்கள் குறித்த செய்திகளை எட்டுத்தொகையின் வாயிலாக இக்கட்டுரை விளக்க முயல்கின்றது.

**போருக்குரிய காரணங்கள்**

சங்க காலத்தில் நிகழ்ந்த போர்கள் பல்வேறு காரணங்களால் நிகழ்ந்தவை. நாடு பிடிக்கும் வேட்கை, பேரரசாக விளங்க வேண்டும் என்ற ஆசை, மகட் கொடை மறுத்தல், கப்பம் கட்டத் தவறும் சூழல், நாடுகளுக்கு இடைப்பட்டப் பகுதியைத் தம் ஆதிக்கத்திற்குள் கொணர முயல்தல் போன்றன போருக்குரிய காரணங்களாக இராசமணிக்கனார் குறிப்பிடுகின்றார் (1970:105). ஆனால் வித்தியானந்தன் மேற்கூறிய காரணங்களோடு அரசுரிமை காரணமாகவும் அன்று போர் நடைபெற்றதெனச் சுட்டிக்காட்டுவர் (1954:76).

**சங்க இலக்கியங்களை ஆழ்ந்து நோக்கும் போது மான உணர்வு, புகழாசை, மண்ணாசை, பொருளாசை, தலைமை நிலை, மகள் மறுத்தல், அரசுரிமை, நண்பர்க்குத் துணைபோதல், வணிகப் பாதுகாப்பு போன்ற காரணங்களுக்காகப் போர் நிகழ்ந்ததாக குறிப்பிடுகின்றது (செ.அன்பு, 2008:6,7).**

**போருக்கு முன் நிகழும் நிகழ்ச்சிகள்**

போர் தொடங்குவதற்கு முன் நிமித்தம் பார்த்தனர். புதுப்புள் வருதல், பழப்புள் அகல்தல், ஏதம் தரும் என நம்பினர் (புறம்.20). இப்புட்பகை காணின் போரைத் தொடங்காது தவிர்த்தனர். (புறம்.68) போர் மேற் செல்வதற்கு முன் வெற்றி கிடைக்குமோ என அறியக் கழங்கிட்டுக் காணும் வழக்கமும் அன்றிருந்தது (பதிற் 32). நறிய பூக்களை நெல்லுடன் தூவித் தொழுது வணங்கி நற்சொல் கேட்டு வருமாறு பெண்டிரையும் ஏவினர் (புறம்.280). உன்ன மரத்தைக் கண்டு வெற்றி வாய்ப்பினை அறிய முயலும் முறையும் அன்று காணப்பட்டது (பதிற்.40,61). உன்ன மரம் தழைத்துச் செழித்து காணப்பெறின் வெற்றி கிட்டும் என்றும் கரிந்து காணப்பெறின் களத்தில் காண்பது தோல்வியென்றும் நம்பினர். அக்கால அரண் அமைப்பில் ஓர் அங்கமான காவற்காடு நாட்டுக்குரிய மன்னன் வெற்றி பெறின் செழித்து அடர்ந்திருக்கும் பகை மன்னன் வெல்வானாயின் காட்டரண் அழிந்துபடும். அவன் தீயிடுதலால் கரிந்தும் போகும். இத்தன்மையே பின்னர் நாடாளும் மன்னர்க்கு வெற்றியெனில் உன்னமரம் தழைப்பதும் தோல்வியெனில் கரிவதுமாகக் காட்சி தரும். நிமித்தமாகிவிட்டது என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்

வீரர் தத்தம் நாடுக்குரிய அடையாளப் பூவோடு போருக்குரிய பூவையும் சூடினர். வெண்ணிப் பறந்தலைப் போரில் பாண்டியன் வேம்பினையும் சேரன் பணத்தோட்டினையும், சோழன் ஆர்த்தியினையும் சூடியமையைப் பெருநராற்றுப்படையால் அறியமுடிகின்றது (பெருநர்.143-148). “இருபெருவேந்தர் பொருதும் களம் கடற்கரைப் பகுதியை ஒட்டியதாகவே அமைந்திருந்தது. கடற்கரை வெளியில் நிறைந்திருப்பது தும்பையே. எனவே அந்நிலத்தில் இயங்கும் படைப் பகைவர் கண்ணிலிருந்து மறைந்து செயல் அங்கிருந்த தும்பையைச்

சூடியிருத்தல் வேண்டும். மாக்பெத் நாடகத்தில் ஒரு பெரும் படை செடிகளை மறைவாகக் கொண்டு அணிவகுத்து சென்று வெல்வதைச் சேக்சுபியரும் காட்டுகின்றார். இவ்வாறு செடி மறைவில் சென்ற முறையே தும்பைப் பூச்சூடும் மரபாக மாறியது என்பர் கா. கோவிந்தன் (1980:220).

**படை அணிவகுப்பு**

பகை நாடு நோக்கி அணிவகுத்துச் செல்லும் படையில் களிறு முதலிலும் அதன்பின் புரவியும், அடுத்து படைமறவரும் சென்றனர் என்பதை ஔவையின் புறப்பாடலில் அறியலாம் (புறம்.98). போர் வீரர்களோடு அவர்களைப் போற்றுதற்கும் மகிழ்வூட்டுதற்கும் பாணன், பாடினி, கூத்தன், விறலி ஆகியோர் சென்றனர் (புறம்.33). இவர்கள் செய்யும் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு வீரர்கள் களிப்போடு ஒரு துன்பமும் அறியாது இருந்தனர் என அறியமுடிகின்றது. படை அணிவகுத்துச் செல்லும் முறையினைக் கௌடில்யர் விரிவாக பின்வருமாறு விளக்குகிறார். முன்புறத்தில் தாக்குதல் இருந்தால் முதலை வடிவிலும் பின்புறத்தில் தாக்குதல் இருந்தால் வண்டி வடிவிலும் பக்கங்களிலிருந்து தாக்குதலை எதிர் பார்த்தால் வைரக்கல் வடிவிலும் ஒடுக்கமான பாதை வழியில் செல்லும் போது ஊசி வடிவிலும் படை அணிவகுத்து அமைதல் வேண்டும் என அவர் கூறுகின்றார். தென்னகத்தைப் பொறுத்த அளவில் பல வடிவில் படை அணி வகுப்பாகிய வீயூகங்கள் வகுக்கப்பட்டமைக்குத் தெளிவானச் சான்றுகள் இல்லை. எனினும் குறிப்பிட்ட அணிவகுப்பு முறையினைத் தமிழர்கள் அறிந்தே இருந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. யானைகள் பரந்து செல்ல விரைந்து செலவினை உடையக் குதிரைகள் தம்மைச் செலுத்தும் வீரர் குறிப்பின் வழி அணி சிதையாது அவரைத் தாங்கிச் செல்ல கொடியசையும் தேர்கள் செல்லும் நெறிக்கேற்பச் சுழன்று செல்ல, வேற்படையினை ஏந்திய வீரர்வரும் காட்சியினைப் பதிற்றுப்பத்து காட்டுகின்றது (பதிற்.9:84).

தமிழர் படை அணிவகுப்பில் யானைகள் முன்னிலையில் நிறுத்தப்பட்டன. பகைவர் அணிவகுப்பைப் பிளத்தற்கு முன்னணியில் நின்ற யானைகள் பயன்படுத்தப்பட்டன. கடலில் செல்லும் மரக்கலம் போலவும் விண்மீன்கள் சூழ விளங்கும் ஒளிபோலவும் வீரர் சூழக்களிறு பகைவர் படைகளைக் கிழித்துக் கொண்டு முன்னேறியதாக புறநானூறு குறிப்பிடுகின்றது.

> **அலெக்சாண்டரை எதிர்த்துப் பேரரசின் படை அணிவகுப்பில் யானைகள் முன்னிலையில் திகழ்ந்தன. 200 யானைகள் 100 அடி இடைவெளியில் நிறுத்தப்பட்டன. யானைகளுக்குப் பின் 30000 வீரர்கள் நின்றனர். அடுத்து புரவிகளும் தேர்களும் நிறத்தப்பட்டன (செ.அன்பு, 2008:23).**

**யானையைப் பழக்குவித்தல்**

சங்கப் பாடல்களில் யானை பாகர் மூலம் பழக்குவிக்கபட்டுள்ளன. ஆரியர் யானையை ஆரிய மொழிவழிப் பழக்குவோராய் குறிப்பிடப்படுகின்றனர். **வடமொழி பயிற்றிக் சூல்லா இளைஞர் கவளம் வைப்ப (முல்லை:35-36)** என்று முல்லைப்பாட்டு சுட்டுகின்றது.

**யானைகளைப் பழக்கிவிடப்பட்டதனை பழைய கன்னட சாசனம் பார்வன் என்ற சொல் காணப்படுகிறது. இச்சொல் மலையாளத்தில் யானைபாகன் என்ற பொருளைத் தருகின்றது. ஆகையால் மலை சார்ந்த பகுதிகளில் வாழும் யானை பாகர்கள் யானையைப் பழக்குவித்து மரக்கட்டைகளைத் தூக்குவதற்குப் பயன்படுத்தி உள்ளனர் என்ற குறிப்பு உணர்த்துகிறது (க.ப.அறவாணன், 1976:26)**

யானையைப் பிடித்து பழக்கும் வழக்கம் காணப்பட்டது. யானையைக் குழியில் பிடிக்கும் வழக்கம் சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ளது.

**மார் பயம்பின் பொறை போற்றாது**
**நீடு குழி அகப்பட்ட**
**பீடுடைய எறுழ் முன்பின்**
**கோடு முற்றிய கொல் களிறு**
**நிலைகலங்கக் குழி கொன்று**
**கிளைபுகலத் தலை கூடி யாங்கு (புறம்., 17:14-19)**
**குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை**
**பிடி படு பூசலின் எய்தா தொழிய (அகம்., 211:9-10)**

போன்ற சங்கப் பாடல்களின் வரிகளால் அறியமுடிகின்றது. யானைகள் வழக்கமாக போகும் தடங்களில் குழிகளைத் தோண்;டி அதன் மேல் மரம், செடி, கொடிகளைப் போட்டு வைத்தனர். இரவில் வரும் யானை அக்குழியில் விழுந்து விடும். இந்தக் குழிகளைச் சங்க காலத்தினர் பயம்பு என்று கூறுகின்றனர். மேலும் பெண் யானையைக் காட்டில் விட்டு அதன் மேல் பாகன் மறைந்து கொண்டு ஆண்யானையை அதன் அருகில் வரும்படிச்செய்து பிடிப்பதும் உண்டு(அகம்:9-11). வடமொழியாரிடம் யானையைப் பயிற்றுவிக்கும் பழக்கம் காணப்படுகிறது என்பதனைச் சங்க இலக்கியத்தில்,

**வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத்**
**தயினுளை மருப்பிற்றங் கையினைக் கொன்டெனக்**
**கனவமும் கருவியின் வடமொழி பயிற்றும்**
**கல்லா விளைஞர் கவளங் கைப்பக் (முல்லை., 33-36)**

என்னும் முல்லைப்பாட்டு பாடல் பதிவு செய்துள்ளது. ஆரியர்களுக்கென யானையைப் பிடிக்கும் முறையும், பயிற்று முறையும் இருந்ததென இப்பாடல் செய்தி விளக்குகின்றது.

போருக்காக யானைகள் பழக்குவிக்கப்பட்டதைப் பதிற்றுப்பத்தின் 82ஆம் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

**செல் சமம் தொலைத்த வினை நவில் யானை**
**கடாஅம் வார்ந்து, கடுஞ்சினம் பொத்தி**
**வண்டு படு சென்னிய பிடி புணர்ந்து இயல**
**மறவர் மறல மாப் படை உறுப்ப (பதிற்., 9:82. 4-8)**

என்னும் பதிற்றுப்பத்தின் வரிகள் யானைகள் போருக்காகவே பிடிக்கப்பட்டு பழக்குவிக்கப்பட்டதை உறுதி செய்கின்றன. அவ்வாறு பழக்குவிக்கப்பட்ட யானைகள் போருக்காகவும், அரசனை ஏற்றி செல்லும் வாகனமாகவும், பரிசில் பொருட்களாகவும், பட்டத்து யானைகளாகவும், சுமைகளைச் சுமந்து செல்லும் கருவியாகவும் பயன்படுத்தப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடப்படுகின்றன.

**போரில் யானை வீழ்தல்**

போருக்காக பழக்குவிக்குப்பட்ட யானைகள் போரில் பகைவர்களால் கொல்லப்பட்டதைப் புறநானூறு, பதிற்றுப்பத்து, குறுந்தொகை வரிகள் விளக்குகின்றன. வீரன் ஒருவனின் மகன் போரில் யானையைக் கொன்ற செய்தியினைப் புறாநானூற்றின் 277 ஆவது பாடல் வரிகள் விளக்குகின்றன. போரில் வீரன் யானைகளைக் கொன்று குவித்த செய்தியினைப் புறநானூற்றின் வரிகள் விளக்குகின்றன (புறம்.,302.9.10,312.5,6). வேந்தர்கள் பெண் யானைகள் துன்புறுமாறு ஆண் யானைகளைக் கொன்றதைப் புறநானூற்றின் 303 ஆம் பாடல் வரிகள் பதிவு செய்துள்ளது. போரில் மன்னன் யானைகளைக் கொன்று குவித்தும் சினம் தணியாது இருந்த நிகழ்வினைப் புறநானூறு 93, 310ஆம் பாடல் வரிகள் விளக்குகின்றது. ஒரு பெண்ணின் தந்தை போரில் யானையைக் கொன்று அதன் பின் அவன் இறந்த நிகழ்வினை,

**மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை,**
**யானை எறிந்து, களத்து ஒழிந்தனனே (புறம்., 279:3,4)**

எனும் வரிகள் பதிவு செய்துள்ளன. பெண்ணின் தந்தை யானைகளை வீழ்த்தி அவனும் இறந்து பட்டதிலிருந்து அவனுடைய வீர பண்பினையும் இணைத்து மேற்குறித்த பாடல் வரிகள் விளக்குகின்றன. யானைகள் போரில் கொல்லப்பட்ட நிகழ்வினைப் பதிற்றுப்பத்தின் 36, 84, புறநானூற்றின் 19, 125, 126, 287, 336 குறுந்தொகையின் 393 ஆகிய பாடல் வரிகள் பதிவு செய்துள்ளன. போரில் ஈடுபடுத்தப்பட்ட யானைகளின் தலைகள் துண்டிக்கப்பட்டதையும், துதிக்கைகள் வெட்டப்பட்ட நிலையில் யானைகள் போர்க்களத்தில் கிடக்கப்பட்ட நிலைகளையும் மேற்குறித்த பாடல் வரிகளின் வழி அறியமுடிகின்றது. போரின் போது யானைகள் பகைவர்களை அழித்த செய்திகளை புறநானூற்றின் 31, 213 ஆம் ஆகிய இரு பாடல்களும் குறிப்பிடுகின்றன. தனது பகைவர்களை அழிக்கும் விதமாக யானைகளைப் பழக்கிவிட்ட முறைகளும் காணப்பட்டதை மேற்குறித்த பாடல்களின் வழி அறியமுடிகின்றது.

போருக்குச் செல்லும் போது யானைகள் மீதேறி அரசர்களும் வீரர்களும் வருவார்கள். போரில் யானைப்படைகளைக் கொண்டு பகைவர்களின் மதிலை தாக்கினர் (புறம்.44:1-10, 98.1-4). யானைப் படைகளைக் கருவியாகக் கொண்டு பகைவர்களை அழித்த செய்தியினை புறநானூறு குறிப்பிடுகின்றது (புறம்.64.3, 497.8-10,). போர்க்களத்தில் வேந்தன் யானையைக் கருவியாகக் கொண்டு போர் புரிந்ததைப் புறநானூறும் (33.11), ஐங்குறுநூறும் (429) பதிவு செய்துள்ளன. அவ்வாறு யானைகள் ஈடுபட்ட போர்கள் அனைத்துமே வெற்றியை தந்தன எனும் செய்தியினைப் பரிபாடல் வரிகள் விளக்குகின்றன (பரி.21.2). போர்க்களத்தில்

யானைகள் பயன்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் வெற்றி பெற்ற செய்திகளை மேற்குறித்தப் பாடல்கள் பதிவு செய்துள்ளன.

யானைகள் போரில் பயன்படுத்தப்பட்ட செய்தியினைப் புறநானூற்றின் 16, 26, 37, 53, 63, 69, 197, 200, 205, 227, 270, 274, 301, 347, 348, 370, 371, 373, 377, 387 கலித்தொகையில் 26, 57, 86 நற்றிணையின் 150, 349, பதிற்றுப்பத்தின் 21, 34, 35, 42, 46, 79, அகநானூற்றின் 57, 144, 177, 211, ஆகிய இலக்கியங்களின் வழி அறிய முடிகின்றது. போரில் யானைகள் முதன்மை இடத்தைப் பிடித்திருந்த செய்தியினை இக்குறிப்புகளின் வழி அறியமுடிகின்றது. சேர மன்னனின் யானைகள் போருக்காக அலைந்து திரிந்ததைப் பதிற்றுப்பத்தின் 67 ஆவது பாடல் வரிகள் விளக்குகின்றது. போருக்காகப் பழக்குவிக்கப்பட்ட சேரனின் ஆண் யானைகள் போர்கள் இல்லாத காலங்களிலும் போர் தேடி அலையும் என்று புலவர் குறிப்பிடுகின்றார். சேரன் செங்குட்டுவனின் யானையின் போர் வெறியினைக் குறிப்பிடும் புலவர் பதிற்றுப்பத்தின் 51 ஆவது பாடலில் போரில் ஈடுபட்ட பகைவர்களின் யானையினைச் சேரன் அடக்கும் செய்தியினைக் குறிப்பிடுகிறார். இவ்வாறு குறிப்பிடும் இலக்கியங்களுள் புறநானூற்றில் போரில் ஈடுபட்ட யானைகள் புறங்காட்டி ஓடும் செய்தியினை மற்றொரு புலவர் சுட்டுகின்றார். (புறம்.308.9-11). அரசர்கள் தனக்கென படைகள் கொண்டிருந்த போதிலும் போரில் அவர்களது யானைகள் வலிமை இல்லாமல் போனதை மேற்குறித்த புறநானூற்றுப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

**குதிரை**

யானைகளுடன் குதிரைகளும் போரில் ஈடுபடுத்தப்பட்ட செய்திகளைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வீரன் ஒருவன் தனது தமையனைக் கொன்றதற்காக பகைவர்களை அழிப்பேன் என்று வஞ்சினம் கூறி அவனது குதிரையைப் போருக்காக ஆயத்தப்படுத்தினான் என்பதை,

**வளிதொழில் ஒழிக்கும் வண்பரிப் புரவி**
**பண்ணற்கு விரைதி, நீயே: நெருநை,**
**எம்முற் தப்பியோன் தம்பியொடு, ஒராங்கு**
**நாளைச் செய்குவென் அமர் (புறம்., 304:3-6)**

எனும் புறநானூற்றின் வரிகள் விளக்குகின்றன.

**குதிரைகள் போரில் வீழ்தல்**

குதிரைகள் கொண்ட இருபெரு வேந்தர்களும் போர்க்களத்தில் வீழ்ந்தனர். அவர்களது வீரம் பொருந்திய குதிரைப் படைகளும் போர்க்களத்தில் வீழ்ந்த செய்தியைப் புறுநானூற்றின் 63, 273 ஆகிய இருபாடல் வரிகளும் பதிவு செய்துள்ளன. பதிற்றுப்பத்தின் 36ஆவது பாடல் வரிகளும் போர்க்களத்தில் குதிரைகள் வீழ்ந்த செய்தியினை குறிப்பிடுகின்றது.

**போரில் குதிரைகள்**

பிடரி மயிரினைக் கொண்டு உழுந்தின் சக்கைகளை உணவாக தின்னும் குதிரைப்

படையானது கடல் நீரினைப் பிளந்துச் செல்லும் தோணிப்போல பகைவரின் படைக்குள் செல்லும் என்று புறநானூறு (299) குறிப்பிடுகின்றது. இப்பாடல் குதிரை மறம் என்னும் துறையின் கீழ் பொன்முடியாரால் பாடப்பட்டதாகும். இப்பாடலில் சிற்றூரில் உள்ள மன்னனின் படைகளை எதிர்த்து வந்த பகை நாட்டு பெருவேந்தர்களின் குதிரைகள் பின்னிட்டு ஓடியதை நகைச்சுவையாக கூறப்பட்டுள்ளது. வையை நீரின் வேகத்தினைக் குறிப்பிடும் பரிபாடலின் புலவர் பாண்டிய மன்னன் பகைவரை வென்று அவர்களின் குதிரைகளுடன் தேரினையும் சேர்த்து கொண்டு வருதல் போல வையை நீர் காணப்பட்டதாக குறிப்பிடுகின்றார். போருடன் ஒப்புமைப்படுத்தி வையை நீர் கூறப்பட்டுள்ளது (பரி.11.60, 61).

குதிரைகள் போரில் கருவியாகப் பயன்படுத்தப்பட்ட செய்தியினைப் புறநானூறும் (97, 227) பதிற்றுப்பத்தும் (69:7, 70:1, 2) குறிப்பிடுகின்றன. போருக்காகக் குதிரைகள் மகிழ்ச்சியுடன் குதித்துச் செல்லும் நிகழ்வினை புறநானூற்றின் 302ஆவது பாடல் பதிவு செய்கின்றது. வீரர்களும் அரசர்களும் குதிரையின் மீதேறி போர் புரிந்த செயலைப் புறுநானூறும் (303) கலித்தொகையும் (31) பதிவு செய்துள்ளன. தனது நாட்டினைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்ட வீரர்கள் போருக்காக குதிரைகளை பழக்கப்படுத்தி அதனை போரில் ஈடுபடும் வண்ணம் உருவாக்கினர். குதிரைகள் போர்க்களத்தில் போர் செய்த விதத்தினை எட்டுத்தொகையுள் அகநானூறு (1,187) பதிற்றுப்பத்து (84) புறநானூறு (98, 377, 158) ஆகிய இலக்கியங்களில் காண முடிகின்றது.

**நிறைவாக**

மனிதன் விலங்கினங்களுள் நாயைத் தான் முதன் முதலில் வீட்டு விலங்காக மாற்றினான் எனக் கூறுவார்கள். இதனைத் தொடர்ந்து ஆடு, மாடு, கோழி முதலியனவற்றை உணவுத் தேவைக்காக வீட்டில் வளர்க்கும் உயிரினங்களாக பழக்குவித்தான். மனிதனின் அடிப்படைத் தேவையான உணவை ஈட்டுதலில் விலங்கினங்கள் வேட்டைப் பொருளாக இருந்தது. வேட்டைப் பொருளாகக் கருதப்பட்ட விலங்கினங்களைத் தன்வயப்படுத்தி உணவுத் தேவைகளை நிறைவு செய்ய இயலும் என்ற ஆதிமனிதனின் முயற்சியே கால்நடை வளர்ப்பாக வளர்ச்சி பெற்றது. கால்நடை வளர்ப்பில் ஆதிமனிதன் ஈடுபட்ட பின்னர் அவனது பண்பாடும் நாகரிகமும் பெருமளவில் மாற்றத்தை தந்தது. எனவே விலங்கினங்களை மனிதன் எவ்வாறு தன்வயப்படுத்தி பயன்படுத்தினான் என்பது பண்பாட்டியல் ஆய்வுகளில் மிக இன்றியமையாததாகும். இவ்வகையில் எட்டுத்தொகை நூற்களில் பதிவாகியுள்ள விலங்கினங்கள் குறித்தச் செய்திகள் தன்வயப்படுத்துதல் என்றும் கருத்தாக்க அடிப்படையில் சிறப்பு கவனத்திற்குரியது. யானைக் குதிரை ஆகியவற்றைத் தன்வயப்படுத்தி பயன்படுத்தும் நிலை சமூகத்தின் வளர்ச்சிப் போக்கான நிலையில் நிகழ்ந்துள்ளதாக அறிய முடிகின்றது. யானை, குதிரை ஆகிய இரண்டும் பெரும்பாலும் போர் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலையையே எட்டுத்தொகை நூற்கள் குறிப்பிடுகின்றன. அரசு உருவாக்கம் நிகழும் சூழலில் நிலத்தைக் கைப்பற்றுதல் அதிகாரத்தை நிலை நிறுத்துதல் போன்றவற்றிற்காக நிகழ்ந்த

போர்களில் யானை, குதிரை ஆகியவற்றிற்குப் பெரும் பங்களிப்புகள் உள்ளன. உணவுத் தேவைக்காக விலங்கினங்கள் தன்வயப்படுத்தப்பட்டதன் அடுத்தக்கட்ட வளர்ச்சி மனிதனின் வேலைகளை விலங்கினங்களைக் கொண்டு செய்வித்தல் எனலாம். அதாவது, போக்குவரத்து, சுமை சுமத்தல், உழவு, ஆகியவற்றிக்காக விலங்கினங்கள் பயன்படுத்தப்பட்டமை தன்வயப்படுத்துதலின் இரண்டாவது நிலை எனக் கருதலாம். போருக்காக விலங்கினங்கள் பயன்படுத்தப்படுவது மூன்றாம் நிலையிலான வளர்ச்சி எனலாம். எட்டுத் தொகையில் பதிவாகியுள்ள யானை, குதிரை சார்ந்த பதிவுகள் இக்கருத்தை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளன.

**துணை நின்ற நூல்கள்**

[1] ஆலிஸ். அ. *பதிற்றுப்பத்து*. சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2007.

[2] சுப்பிரமணியன். பெ. *பரிபாடல்*. சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2007.

[3] இராசமாணிக்கனார்.மா. *தமிழ் ஆட்சி* , சென்னை: பாரிநிலையம், 1970.

[4] கோவிந்தன். கா. *பண்டைத் தமிழர் போர் நெறி.* சென்னை: வள்ளுவர் பண்ணை, 1980.

[5] வித்யானந்தன். சு. *தமிழர் சால்பு*. கண்டி: தமிழ் மன்றம், 1954.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.